# தேசிய கல்வி நிறுவகம்
# பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
# (முழு நேரம் 2019)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் மூலமாக நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**டிப்ளோமா பாடநெறி**

இந்த பட்டப்பின் டிப்ளோமா கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திக்குத் தேவைப்படுகின்ற தலைமைத்துவம், மற்றும் முகாமைத்துவத்திற்கான அறிவு, தேர்ச்சிகள், மனப்பாங்குகள் என்பனவற்றை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறி வேலைகள் மற்றும், ஆய்வு ஒப்படைகள், என்பன ஆங்கில மொழி மூலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகும். எல்லாத் தகுதியும் பெற்ற விண்ணப்பதாரிகள் நுழைவுப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும்.

**பாடநெறி நடைபெறும் இடம்.** : கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்,
தேசிய கல்வி நிறுவகம், மீபே, பாதுக்கை.

**பாடநெறியின் காலம்** : முழு நேரம் :- ஒரு வருடம், (மூன்று கல்வித் தவணைகள்)

இப்பாடநெறி 2019 ஜனவரியில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**மொழி மூலம்** : ஆங்கிலம்

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்** :

**விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

1. இலங்கை கல்வி நிர்வாக சேவை/ இலங்கை அதிபர் சேவை/ இலங்கை கல்வியியலாளர் சேவை / அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச உதவி வழங்கும் கல்வி நிறுவகமொன்றின் / பிரிவேனாவொன்றின் / அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவகமொன்றின் தலைவராக இருத்தல்.

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் / கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கல்விமாணிப் பட்டம்.

**அல்லது**

வேறு பட்டங்களுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா/ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் / கல்வியியல் கல்லூரி டிப்ளோமா போன்ற தொழிற்றகைமைகளில் ஒன்று இருத்தல்.

3. நான்கு வருட கற்பித்தல் அனுபவமும் அதில் இரண்டு வருடங்களேனும் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பணிகளில் ஈடுபட்டிருத்தல்.

4. இப்பாடநெறியில் கலந்துகொள்ளும் காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்த ஒரு பாடநெறியிலோ அல்லது வேறு உயர்கல்வி நிறுவகங்களிலோ நடாத்தப்படும் எந்தவொரு பாடநெறியிலோ முழு நேர அல்லது பகுதி நேர பங்குபற்றுனராக இல்லாதிருத்தல்.

**பாடநெறிக்குத் தெரிவு செய்யும் முறை :**

சகல விண்ணப்பதாரிகளும் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றி கீழ்க் குறிப்பிடப்படும் இரண்டு பாடங்களிலும் உயர் புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் அழைக்கப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**எழுத்துப் பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.**

அவையாவன:

வினாப்பத்திரம் I : கல்வி முகாமைத்துவம் (இரண்டு மணி)

வினாப்பத்திரம் II : ஆங்கில மொழி மற்றும் கற்றல் திறன் (1 ½ மணி)

நுழைவுப் பரீட்சைகளுக்கான விடைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி மூலம் எழுத முடியும்.

**விண்ணப்பிக்கும் முறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.nie.lk) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு அமைவாக சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் என்ற பெயரில் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கணக்கு இலக்கம் 7041168 (நுழைவுப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1250/- ) வை வைப்பில் இட்டு அதன் பற்றுச் சீட்டினையும் இணைத்து

மேலதிக பணிப்பாளர் நாயகம்,

கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மீபே சந்தி, பாதுக்கை.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பப் பத்திரத்தினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தங்கள் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் நுழைவுப் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

- விண்ணப்பப் பத்திரத்தினை அனுப்பி வைக்கும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் PGDEM- 2019 (முழு நேரம்) எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- தங்களது விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி:- 15/ 11/ 2018.
- பாடநெறிக்கான கட்டணம் : 60000/-
- பதிவுக்கட்டணம் 1000/-

பாடநெறிக்கான முழுக்கட்டணம் பதிவின் போது செலுத்தலாம்

அல்லது 50% பாடநெறிக்கான பதிவின் போதும்

50% பாடநெறிக்கான பதிவின் பின் 6 மாதத்திற்குள் செலுத்த முடியும்.

தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

கலாநிதி. (திருமதி) ரி. எ. ஆர். ஜே. குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.